சிங்கப்பூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிக்காக சிங்கப்பூர் வந்திருந்த கழக துணைப் பொதுசெயலாளரும் நாடாளுமன்ற கழகத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களை அயலக தமிழர் நலவாரிய உறுப்பினர் ஜி.வி.ராம் மற்றும் கவிஞர். இறை மதியழகன் ஆகியோருடன் திமுகவைச் சேர்ந்த செந்தில்குமார், சந்திரசேகரன், ஆறுமுகம், ரமேஷ், ஜி.மணி மாறன், மெய்யர் சரவணன்,சிங்காரவேலன், ராஜராஜன், பாரதி, கணேசன், தேவன், லோகு, உடைமணி ஆகியோர் சந்தித்தனர்.

ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் - மருத்துவத் துறை சார்பில்

அரியலூர் மாவட்டம் - தா.பழூர் ஒன்றியத்தில் புதிய கட்டிடங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

அரியலூர், செப். 6- அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டியால் துணை சுகாதார நிலைய வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 07 துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், 01 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 01 வட்டார பொது சுகாதார அலகு கட்டடங்களினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடங்களினை திறந்து வைத்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார மைய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டும், பதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுதல் பணிகள் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஜெயங்கொண்டத்தில் ஏற்கனவே அரசு சார்பில் கட்டப்பட்டு வருகின்ற கட்டட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஜெயங்கொண்டம் மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகதரம்உயர்த்தப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் என்பதில் ஜெயம் என்பதன் பொருள் வெற்றி என்பதாகும். வெற்றி கொண்டான் அவர்கள் இப்பகுதிக்கு பெருமை சேர்த்த மிக முக்கிய நபராவர். அவர் பேச்சினில் இப்பகுதி மக்களை மட்டுமல்ல உலக தமிழர்களையும் வெற்றிகொண்டவராக திகழ்ந்தவர். ஜெயங்கொண்டம் பகுதிக்கு சிப்காட் வளாகம் வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ஜெயங்கொண்டத்தில் சிப்காட் வளாகம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறும்.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 8,713 இடங்களில் துணை சுகாதார நிலையங்கள் உள்ளது. இத்துணை சுகாதார நிலையங்களிலும் ஒரு செவிலியர் மட்டும் இருப்பார்கள். ஆனால் இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத்தில் இரண்டு செவிலியர்கள் பணியாற்ற இருக்கிறார்கள். இப்பகுதியில் வசிக்கக் கூடிய பொதுமக்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டாலோ, உடல்நிலை பாதிப்புகள் ஏற்பட்டாலோ இம்மருத்துவமனைக்கு வந்தால் மருத்து வர்கள் இல்லையே என கவலை கொள்ள தேவையில்லை. துணை சுகாதார நிலையமாக இருந்தாலும் கிராமத்தில் இருப்பவர்களுடைய நோய் பாதிப்புகளை நீக்குவதற்கு இ-சஞ்சீவனி என்ற திட்டத்தின் மூலம் மருத்துவர்களுடன் கலந்துரையாடி மருத்துவத்தை பெறுகின்ற மகத்தான திட்டமும் இம்மருத்துவமனையில் தற்போது தொடங்கப்பட்டு இருக்கிறது.

அதன்படி ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டியால் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், ஆத்துக்குறிச்சி கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், அய்யூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், ஓலையூர் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், புதுக்குடி கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், உதயநத்தம் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட வீராக்கன் கிராமத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடமும், அரியலூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட கடுகூர் கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டடமும், ஜெயங்கொண்டத்தில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடம் என மொத்தம் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 மருத்துவத் துறை கட்டடங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது.

அரியலூர் மாவட்டத்தை பொறுத்தவரையில் துணை சுகாதார நிலையங்களும், ஆரம்ப சுகாதார நிலை யங்களும் அதிக அளவில் உள்ளன. இரண்டு இடங்களில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கு அரசு மருத்துவ சேவைதான் 100 சதவீதம் உபயோகமாக இருந்துகொண்டிருக்கிறது. அதிகமான உழைப்பின் காரணமாகவும். அதற்கேற்றவாறு நீர் பருகாமல் இருப்பதும் அதனால் நீர்ச்சத்து குறையும் போது சிறுநீரக பாதிப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறுநீரகம் பாதுகாப்பு திட்டத்தினை சேலம் மாவட்டம், காடையான்பட்டி கிராமத்தில் 2023, ஜூலை 10ஆம் நாளன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள 2,286 ஆரம்ப சுகாதார மையங்கள், 8,713 துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் 10,999 மருத்துவமனைகளிலும் பொதுமக்களுக்கு சிறுநீரகம் பரிசோதனை செய்யப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஏராளமான திட்டங்கள் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 1 கோடி 91 இலட்சம் பயனாளிகளை வீடு தேடிச் சென்று மருத்துவம் வழங்குகின்ற இத்திட்டம் உலகளவில் தமிழ்நாட்டில் மட்டுமே நடைபெறுகின்ற திட்டமாகும். சாலை விபத்துகளால் பாதிக்கப்படுவோருக்கு உடனடியாக அவர்களது உயிரை காப்பாற்று கின்ற அற்புதமான திட்டம் இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48 திட்டம். இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் அதிகம் விபத்துகள் நடைபெறும் 500 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அப்பகுதிகளின் அருகில் உள்ள 237 அரசு மருத்துவமனைகளிலும், 455 தனியார் மருத்துவமனைகளிலும் என மொத்தம் 692 மருத்துவமனைகளில் விபத்து நேர்ந்தவுடன் அவர்களை உடனடியாக மருத்துவமனைகளில் சேர்த்து முதல் 48 மணிநேரத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் அரசு இலவசமாக வழங்கி அவர்களுடைய உயிரை காப்பாற்றுகின்ற திட்டம் தான் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேல்மருவத்தூரில் 2021 டிசம்பர் 18 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அன்று முதல் இத்திட்டத்தின் மூலம் விபத்துகளால் பாதிக்கப்பட்ட 2 இலட்சத்து 83 ஆயிரத்து 865 நபர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் 247 கோடியே 83 இலட்சம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபாய் தொகையினை 02 இலட்சமாக உயர்;த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

மேலும், ரூ.1.20 கோடி மதிப்பில் பொய்யூர் ஆரம்ப சுகாதார நிலையம் (அரியலூர் தொகுதி), ரூ.50 இலட்சம் மதிப்பில் குமுழியம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் (குன்னம் தொகுதி) ரூ.50 இலட்சம் மதிப்பில் தா.பழூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம் (ஜெயங்கொண்டம் தொகுதி), ரூ.30 இலட்சம் மதிப்பில் சிலம்பூர் (ஜெயங்கொண்டம் தொகுதி), ரூ.30இலட்சம் மதிப்பில் திருக்களப்பூர் (ஜெயங்கொண்டம் தொகுதி), ரூ.30 இலட்சம் மதிப்பில் அனிக்குதிச்சான் (ஜெயங்கொண்டம் தொகுதி) ரூ.30 இலட்சம் மதிப்பில் தளவாய் (குன்னம் தொகுதி), ரூ.35 இலட்சம் மதிப்பில் குழுமூர் (குன்னம் தொகுதி) ரூ.35 இலட்சம் மதிப்பில் அனிகுதிச்சான் (ஜெயங்கொண்டம் தொகுதி), ரூ.30 இலட்சம் மதிப்பில் செந்துறை காலனி (குன்னம் தொகுதி), ரூ.30 இலட்சம் மதிப்பில் திருமழபாடி (அரியலூர் தொகுதி) ஆகிய பகுதிகளில் துணை சுகாதார நிலையங்களும் ஆக மொத்தம் ரூ.63.93 கோடி செலவில் 15 மருத்துவ கட்டடங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுபேற்ற பிறகு அரியலூர் மாவட்டத்தில், ரூ.136.13 கோடி செலவில், 23 துணை சுகாதார நிலையங்கள், 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர்குடியிருப்பு, புறநோயாளிகள் பிரிவு மற்றும் கூடுதல் பிரிவு மற்றும் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும் அரியலூர் மாவட்டம் முழுவதும் ரூ.65.38 கோடி செலவில் 18 புதிய மருத்துவ கட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது என அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் (சென்னை) செல்வவிநாயகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.க.கவிதா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஷீஜா, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துக்கிருஷ்ணன். இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. மாரிமுத்து, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. அஜிதா, ஜெயங்கொண்டம் நகர்மன்றத் தலைவலர் திருமதி. சுமதி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) திருமுருகு, வட்டார மருத்துவ அலுவலர் மரு.தட்சிணாமூர்த்தி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம். தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டியால் துணை சுகாதார வளாகத்தில். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் துணை சுகாதார நிலைய புதிய மையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடங்களினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் , பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநர் (சென்னை) செல்வவிநாயகம் மற்றும் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் பேரூர் செயலாளர் எம்.எஸ்.அக்பர் அலியின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னவாசல் அரசு மருத்துவமனைக்கு அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் முகமது ரிஷா குடும்பத்தினரால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 10 லட்சம் மதிப்பிலான எக்ஸ்ரே கருவி மிஷன், இரத்தவியல் பகுப்பாய்வி கருவி, ஆட்டோ அனலைசர் கருவி, ஈசிஜி ஆகிய கருவிகளை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் வழங்கினார்கள். அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன், அன்னவாசல் பேரூர் செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிசா, எம்.எம்.பாலு, எம்.செந்தில்குமார், கே.எஸ்.ச.இளையச்சூரியன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

மூன்றாவது முறையாக பாராலிம்பிக்சில்

பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு வாழ்த்து!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சிகாகோ, செப். 5 - பிரான்ஸில் நடைபெறும் பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேலுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு, ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

மேலும், இந்தப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த எஸ்ரா ஃப்ரெச் 1.94 மீட்டர் உயரம் தாண்டி தங்கப்பதக்கமும், இந்திய வீரரான ஷரத் குமார் 1.88 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும், மற்றொரு இந்திய வீரரான தமிழகத்தைச் சேர்ந்த வீரரான மாரியப்பன் தங்கவேலு 1.85 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலமும் வென்றனர்.

இதுபற்றி தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், **"மூன்றாவது முறையாகப் பாராலிம்பிக்ஸில் பதக்கம் வென்றுள்ள மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு வாழ்த்துகள்! தன்னுடைய சாதனைகளால் பலருக்கும் ஊக்கமாகத் திகழும் நமது தங்கமகனின் வெற்றிப் பயணம் தொடர வாழ்த்துகிறேன்"** எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக மாரியப்பன் தங்கவேலு, 2016 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டீ ஜெனிரோ பாராலிம்பிக்ஸில் உயரம் தாண்டுதலில் தங்கப்பதக்கமும், 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸில் வெள்ளி பதக்கமும் வென்றது குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூர் மாவட்டம் - அம்மா பேட்டையில்

சு.கல்யாணசுந்தரம் எம்.பி. நிதியில் - அரசு சுகாதார நிலையக் கட்டிடம்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தனர்!

தஞ்சை, செப். 6 - தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை அரசு சுகாதார நிலைய கூடுதல் கட்டடம் ரூ.75 இலட்சம் மதிப்பில் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ளதை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் 3.9.2024 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.அன்பழகன் (கும்பகோணம்), எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணைத்தலைவர் சு.க.முத்து செல்வம், அம்மாபேட்டை ஒன்றியக் குழுத் தலைவர் கே.வீ.கலைச்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

பின்னர் பாபநாசம் அரசு மருத்துவமனை அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பட்டீஸ்வரம் ஆகிய இடங்களைப் பார்வையிட்டு அமைச்சர் பெருமக்கள் ஆய்வு செய்தார்கள்.

பின்னர் கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில், ரூ.4.38 கோடி மதிப்பில் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளின் உதவியாளர்கள் காத்திருப்பு கூடம் மற்றும் டயாலிசிஸ் சிறப்பு வார்டு கட்டடங்களையும், ரூ.33.60 இலட்சம் மதிப்பில் கட்டண சிகிச்சைப் பிரிவு கட்டடத்தையும், ரூ.22.75 இலட்சம் மதிப்பில் பட்டீஸ்வரம் ஆரம்ப சுகாதார நிலையம், செவிலியர் குடியிருப்பு (பாபநாசம் தொகுதி) கட்டடம் மொத்தம் ரூ.4.94 கோடி மதிப்பில் புதிய கட்டடங்களை அமைச்சர் பெருமக்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், ரூ.5.40 கோடி மதிப்பில் கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கதிரியக்கத் துறைக் கட்டடம், சிறப்பு சிகிச்சை பிரிவு மற்றும் செவிலியர் ஓய்வு கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் பணியினை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திறந்து வைத்தனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழக அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சிறந்த கட்டமைப்புகளை உருவாக்கி மக்கள் நலன் காத்து வருகிறார்கள். கொரோனா காலந்தொட்டு, மக்கள் நலன் காப்பதில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழ்நாட்டை வழி நடத்தி வருகிறார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.4.94 கோடி மதிப்பில் புதிய கட்டடங்களை திறந்து வைத்தும், ரூ.5.40 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் பணிகள் துவங்கப்பட் டுள்ளது. பொதுமக்கள் இம்மருத்துவமனையின் வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் மா.சுப்ரமணியன் பேசினார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

இவ்விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறை, பள்ளிக் கல்வித் துறைகளை தனிக் கவனம் செலுத்தி சிறப்பான திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார். கும்பகோணம் அரசு மருத்துவமனை புதிய பொலிவு பெற்றுள்ளது. குடந்தையை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களின் நலன் காத்திட சேவையாற்றுகிற இம்மருத்துவமனையில் பணியாற்றுகிற மருத்துவர்கள், செவிலியர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் மருத்துவ நலப் பணிகள் இயக்குநர் மரு.ஜெய.ராஜமூர்த்தி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மரு.தி.ச. செல்வவிநாயகம், உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ்குமார், மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப. தமிழழகன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் சு.க.முத்து செல்வம், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.கலைவாணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.